**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி**

**முன்னிலை - திரு.எம்.சந்தோஷம் பி,எஸ்சி.,பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி அறந்தாங்கி**

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் வியாழன்கிழமை

இடைநிலை மனு எண்.1521/18

IN

அசல் வழக்கு எண்.137/18

சாகுல்உறமீது ---- **மனுதாரர்/வாதி**

**/எதிர்/**

1. முகமதுராவுத்தர்,

2.சலிமாபீவி, .... **எதிர்மனுதார்கள் /பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் 21.02.2022 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எம்.இராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A.கான்முகமது அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்மந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனு கட்டளை 39 விதி 1 மற்றும் 2 உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

3. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பது தான் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயமாகும்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் மனுதாரர் கோருகின்ற பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கதக்கதா? என்பதை கவனத்துடன் பரிசீலனை செய்கையில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இச்சூழ்நிலையில் மனுதாரர் தனது மனுவில் கோரியுள்ள பரிகாரத்தினை இவ்வழக்கினுடைய விசாரணையின் போது எதிர் மனுதாரர் தரப்பிலும் முன்னிறுத்தப்படும் சாட்சிகளின் மூலமும் சான்றாவணங்களின் மூலமும் மனுதாரருக்கு மனுச் சொத்தில் உரிமை உள்ளதா

M SANTHOSHAM
Digitally signed by M SANTHOSHAM
Date: 2022.03.14 17:01:47 +0530

என்பதும் அவர் கோருகின்ற பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதையும் தீர்மானிக்க முடியும். மேலும் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரமும் இம்மனுவின் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரமும் ஒன்றே ஆகும். மேலும் இம்மனுவின் அசல் வழக்கானது எழுவினாக்கள் வனையப்பட உள்ள நிலையில் சாட்சிகள் விசாரணை செய்ய வேண்டிய நிலையிலும் மனுதாரர் தமது மனுவில் முதல் தோற்ற வழக்கோ, எஞ்சிய தகைநலமோ அல்லது இம்மனுவினை அனுமதிக்காத பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு ஏற்படும் என்பதை நிரூபிக்க தவறிவிட்ட நிலையிலும், இம்மனுவினை அனுமதிக்க உரிய முகாந்திரம் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எனவே நீதியின் நலன் கருதி இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ம் நாள் நாளாகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/-எம்.சந்தோஷம்**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

மனுதாரர் தரப்புச் சாட்சி சான்றாவணங்கள் :- இல்லை.

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:- இல்லை

**//உண்மை நகல்//**

M SANTHOSHAM
Digitally signed by M SANTHOSHAM
Date: 2022.03.14 17:01:58 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

வரைவு / செவ்வை உத்திரவு
**I.A. No. 1521/2018**
**O.S. No.137/2018**
நாள் **24.02.2022**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**